www.tamilarangam.net

பிரான்சு வாழ் இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு!

போதைப் பொருள் கடத்துகின்ற நடவடிக்கையானது, இலங்கைத் தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தைப் பின்னடையச் செய்கின்றது என்பதுடன் முழு இனத்திற்குமே அபகீர்த்தியை உண்டாக்கும் செயல் என்பதனை நாங்கள் அறிவிக்க விரும்புகின்றோம்.

இதே வேளை, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்களின் பிரெஞ்சுக் கிளையினராகிய நாங்கள் போதைப் பொருள் தொடர்புடைய சமூக விரோதச் செயல்கள் எதிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எங்கட்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லையென்பதை அறியத்தருகிறோம்.

இரண்டு கிழமைகள் முன்னதாக, 10.8.85 இல் பரிசுப் பிராந்தியத்தில் பத்து கிலோ போதைப் பொருட்கள் பிரெஞ்சுப் பொலிசாரால் கைப்பற்றப் பட்ட பின்னர் இவ் இழிதொழிலுடன் விடுதலை இயக்கங்களைத் தொடர்பு படுத்திச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய செயல்களுடன் இயக்கங்களுக்கு எதுவித தொடர்புகளும் இல்லாதிருப் பினும், இவ்வகையான திரிபுச் செய்திகள் எமது போராட்டத்தைப் பின்னடையச் செய்கின்றன. தவிரவும் ஒரு சமுதாயத்தையே குறிப்பாக இளைஞர்களின் எதிர்காலத்தையே இப் போதைப் பொருட்கள் நிர்மூலமாக்குவதை நீங்கள் அறிவீர்கள். போதைப் பொருட்கள் பாவிப்பதால் மாத்திரம் மாதாந்தம் பிரான்சில் 17 பேர் மரணமடைவதாகத் தெரிவிக்கும் புள்ளிவிபரங்களை அறியும் பிரெஞ்சு மக்கள் இத் தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்களை வெறுக்கத் துணிவது இயற்கையே.

சிறீலங்கா சிங்கள அரசானது, இப்போதைப் பொருள் கடத்தலை இயக்கங்களுடன் தொடர்புபடுத்தி, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கக் கூடிய சர்வதேச ரீதியிலான பிரச்சாரத்தில் தீவிரமாக முனைந்துள்ளமையையும் நாம் கவனத்திற்கெடுக்க வேண்டியவர்களாகிறோம்.

எனவே, இந் நெருக்கடியான சூழ்நிலையில் பிரான்சு வாழ் தமிழ் மக்களாகிய நாங்கள் போதைப் பொருள் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பேர்வழிகளுடனான தொடர்புகளைத் தவிர்ப்பதுடன், பிரெஞ்சு வாழ் மக்களினதும், அரசினதும் நன்மதிப்பைப் பெறுவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

மறுபுறத்தில், இவ் இழிதொழிலுடன் தொடர்புடைய சகல நபர்களையும் அத்தகைய நடவடிக்கைகளைக் கைவிடுமாறும், தமது சொந்த நலனுக்கும் தப்பிக் கொள்ளும் நோக்குடனும் இயக்கங்களின் பெயர்களை உபயோகிக்கவேண்டாம் என்றும் கண்டிப்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலை இயக்கம்

ஈழப் புரட்சி அமைப்பு

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி